<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்</u>

**சி.சி.எண்.53/2022**

பெயர் – ரவிக்குமார் (PW1 )

நாள் – 23.10.2025

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

1) சொர்ணலட்சுமி இன்ஜினியரிங் கம்பெனி மற்றும் ருத்ராடெக் கம்பெனி மற்றும் கம்பெனியின் உரிமையாளர் முகவரி எனக்கு தெரியமா என்றால் கம்பெநனி முகவரி மட்டும் எனக்கு தெரியும். மேற்படி கம்பெனியின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியும். உரிமையாளர் தான் என்னிடம் வந்து கடன் வாங்கினார் என்றால் சரிதான். உரிமையாளர் தான் வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த இடத்தில் காசோலை கொடுக்கப்பட்டது என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் காசோலை கொடுக்கப்பட்ட இடம் குறித்து குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு கூறியுள்ளேன். சொர்ணலட்சுமி இன்ஜினியரிங் கம்பெனி உரிமையாளர் காசோலை கொடுக்கும் போது நேரம் என்னவாக இருக்கும் என்றால் அது குறித்து எனக்கு நினைவில்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லுகின்ற நேரம், இடம் ஆகியவற்றை புகார்மனு, நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் குறிப்பிட்டு கூறவில்லை. பொதுவாக கடன் கொடுக்கும் போது வட்டியில்லாமல் கொடுப்பது கிடையாதென்றால் இவ்வழக்கின் எதிரி பல ஆண்டுகள் பழக்கமுடையவர் என்பதால் வட்டியில்லாமல் அவருக்கு கடன் கொடுத்தேன்.

3) பெரிய தொகையை வட்டியில்லாமல் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரியின் ஆதார் கார்டில் உள்ள முகவரியும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட முகவரியும் வெவ்வேறாக உள்ளதென்றால் சரிதான். (எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் எதிரியின் ஆதார் கார்டினை

காண்பித்து முகவரியை படித்து காண்பிக்க வைத்த அதன் நகலானது **எ.த.சா.ஆ.1** ஆனது ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எதிரியின் சரியான முகவரிக்கு தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்பதற்கு சரியான சாட்சியம் என்னிம் உள்ளது என்றால் சரிதான்.

4) அந்த சாட்சியத்தில் நீதிமன்றத்தில் கொடுக்க தயார் என்றால் எதிரி சொன்னதன் அடிப்படையில் தான் அவரது முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி நான் கூறியது வழக்கிற்காக பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் உண்மையான முகவரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் எதிரி அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பார் என்றால் சரியல்ல. நான் முறையான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் இவ்வழக்கானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5) சொன்ன விதத்தில், நேரத்தில் சட்டப்படியான முறையில் கடன் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றும், அதற்காக எந்த வித காசோலையும் எனக்கு கடனுக்காகவோ, கடப்பாடுக்காகவோ கொடுக்கவில்லை என்றும் பிணாமி டிரான்ஷக்சன் என்பதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததற்கு எழுத்துப்பூர்வமாக எந்த வித ஆவணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்ததால் ஆவணம் எதுவும் பெறவில்லை.